# 2018 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை

அரச நிதித் திணைக்களம்

பொதுத் திறைசேரி

நிதி அமைச்சு

## உள்ளடக்கம்


நோக்கு

பணிநோக்கு

அரச நிதி மீளாய்வு

குறிக்கோள்கள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

2018 ஆம் ஆண்டில் செயலாற்றுகை

1. நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான செயற்பாடுகள்
   - 1.1 புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம்
   - 1.2 அரச கணக்குகள் பற்றிய செயற்குழு
   - 1.3 அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை பற்றிய தொடர் செயல்களை மேற்கொள்ளல்
   - 1.4 அரச கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்
   - 1.5 நட்டங்களும் பதிவழிப்புக்களும்
   - 1.6 சர்வதேச துாதுக்களின் பாவனைக்குட்படுத்திய வாகனங்களை அகற்றுதல்
   - 1.7 494 ஆம் இலக்க நிதி ஒழுங்கு விதியின் கீழ் 2018 ஆம் ஆண்டில் முத்திரை மார்க்கமாக திரட்டப்படுகின்ற வருமானத்தின் ஒதுக்கீடு
   - 1.8 2018 ஆம் ஆண்டில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் நியமனம்

2. அரச நிதி சுற்றறிக்கைகள் - 2018 ஆம் ஆண்டு
   - 2.1 2018 வரவு செலவு திட்ட முன் மொழிவின் 261 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் கட்டணங்களையும் அறவீடுகளையும் திருத்துவதற்காக 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிடல்
   - 2.2 2018.08.27 ஆந் திகதிய 02/2018 இலக்க சுற்றறிக்கையை வெளியிடல் (நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லா நிதியங்களின் மீளாய்வு - 2016 வரவு செலவு திட்ட முன்மொழிவுகள்)
   - 2.3 2018.10.23 ஆந் திகதிய 05/2018 இலக்க அரச நிதி சுற்றறிக்கையை வளியிடல் (இலங்கை அரசாங்கத் துறைக்காக (e-GP) முறைமையை அறிமுகப்படுத்தல்
   - 2.4 2018.11.19 ஆந் திகதிய 06/2018 இலக்க சுற்றறிக்கையை வெளியிடல் …………………………………………………………….
   - 2.5 2018.11.26 ஆந் திகதிய 07/2018 இலக்க சுற்றறிக்கையை வெளியிடல்

     **அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு (SCAPCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழு (CANCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை பெறுகைக் குழு (CACPCs)**

3. பெறுகை முகாமைத்துவம்

3.1 2018 ஆண்டின் பெறுகை கொள்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

3.2 (e-GP) பெறுகை கட்டமைப்பு

4 நிதி முகாமைத்துவம்

5 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான நிதி அமைச்சரின் அவதானிப்புக்கள்

6 நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

6.1 பதவியணி

6.2 2018 ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

6.3 2018 ஆண்டில் இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள்

6.4 ஊழியர்களுக்கான பயிற்றுவிப்புக்கள்

6.4.அ. வெளிநாட்டுப் பயிற்சி – 2018

6.4.ஆ. உள்நாட்டுப் பயிற்சி

6.5 நிதி முகாமைத்துவம்

6.5.அ. திணைக்களத்தின் மீளமைப்பு

6.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் “பீ” கணக்கு

அட்டவணைகளும் குறிப்புக்களும்


| | |
|---|---|
| அட்டவணை 01 | 2018 ஆண்டில் திருத்தப்பட்ட கட்டணங்களும் அறவீடுகளும் |
| அட்டவணை 02 | 2018 ஆண்டில் நட்டங்களும் பதிவழிப்புக்களும் |
| அட்டவணை 03 | 2018 ஆண்டில் முத்திரை வருமானம் |
| அட்டவணை 04 | அரச நிதி சுற்றறிக்கைகள் |
| அட்டவணை 05 | 2018 ஆண்டில் வழங்கப்பட்ட அமைச்சரவை மட்ட பெறுகை |
| அட்டவணை 06 | மூடப்படவுள்ள நிதியங்களின் பட்டியல் |
| அட்டவணை 07 | பிரிவு வாரியாக அமைச்சரவை அவதானிப்புக்களின் பட்டியல் |
| அட்டவணை 08 | 2018.12.31 திகதி வரை அங்கீகரிக்கப்பட்டதும் உறுதியாகவுமுள்ள பதவியணி |
| அட்டவணை 09 | 2018 ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள் |
| அட்டவணை 10 | 2018 ஆண்டில் இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள் |
| அட்டவணை 11 | 2018 ஆண்டில் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு சென்ற உத்தியோகத்தர்கள் |
| அட்டவணை 12 | 2018 ஆண்டில் உள்நாட்டில் பயிற்சி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் |
| அட்டவணை 13 | 2018 இல் திணைக்கள செலவினங்கள் |
| அட்டவணை 14 | முற்பண "பீ" கணக்கு |

# நோக்கு

" அரச துறையின் வெளிப்படையான தன்மை  பொறுப்புக்கூறல் மற்றும் சேவை வழங்கலை விருத்தி செய்வதற்காக வலுவான அரச நிதி முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் சட்டகம் ஒன்றினைத் தயாரித்தல்"

# செயற்பணி

"அரச துறையில் பொது மக்களுக்கான பொறுப்புக் கூறலுக்கு ஒத்துழைக்கின்ற நிறுவன சார் தொழிற்பாடுடனான நல்லாட்சி சூழலொன்றினை வலுவூட்டுவதற்காக அரச நிதி முறைமை, நடைமுறைகள் என்பவற்றினைத் தயாரித்தல், மீளாய்வு செய்தல், அபிவிருத்தி செய்தல், பின்னூட்டல் மற்றும் இற்றைப்படுத்தல்"

# அரச நிதி மீளாய்வு

**மேல்நோக்கு**

நாட்டின் பொருளாதாரத்தில் துரிதமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அரச வளங்களை, அதாவது அரச வருமானம் மற்றும் நிதியத்தின் செலவினம் என்பன அரசாங்கத்தினால் முகாமை செய்யப்படுவதே அரச நிதி முகாமைத்துவத்துவம் ஆகும் உண்மையில் சமூகத்தேவைப்பாடுகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வளங்களிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கின்றபடியினால் பொருளாதார அழிவுகள் மற்றும் வீண்விரயமாவதை முடியுமானவரையில் குறைக்கும் விதத்தில் சகல அரச வளங்களையும் வினைத்திறனுடனும் உற்பத்தித்திறனுடனும் பயன்படுத்துவது அவசியமானதாகும். பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கையையும் பொது உடன்பாட்டையும் ஏற்படுத்துவதில் வினைத்திறன்மிக்க அரச நிதி முகாமைத்துவம் கேந்திர நிலையமாகத் தொழிற்படுகின்றது. அரச நிதிகளின் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்தி நாட்டின் பிரஜைகளுக்காக மிகச் சிறந்த சேவையொன்றை வழங்கி நீண்டகால பொருளாதார வெற்றியை உறுதிப்படுத்துவதற்கும் வரையறுக்கப்பட்ட வளங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் அரச நிதி முகாமைத்துவ செயன்முறை மற்றும் நிறுவனங்களின் மறுசீரமைப்பு என்பவற்றை மேற்கொள்வது அவசியமானதாகும்.

**குறிக்கோள்**

(i) அரச துறையின் கொடுக்கல்வாங்கல்களில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தும்பொருட்டு அரச நிதி முகாமைத்துவம் பற்றிய முறைமைத் தொகுதி மற்றும் நடவடிக்கை முறையைத் தயாரித்தல், அபிவிருத்திசெய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல், தொடர் செயல் என்பவற்றை மேற்கொள்ளுதல்.
(ii) அரச நிதி வளங்களை உற்பத்தித்திறனுடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்தவதனை உறுதித்படுத்தும்பொருட்டு அரச கணக்குகள் செயற்குழுவுக்குத் (COPA) தேவையான உதவியை வழங்குதல் மற்றும் அரச துறையின் நல்லாட்சியை மேம்படுத்துதலும்.
(iii) தற்போது காணப்படுகின்ற அரசாங்கத்தின் கட்டணம் மற்றும் அறவீடுகளில் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் மீளாய்வு செய்தலும் வரியல்லாத வருமானங்களைச் சம்பாதிக்கும் ஆற்றல் பற்றி தேடிப்பார்த்தலும்.
(iv) அரச நிதியை வினைத்திறனுடனும் உற்பத்தித்திறனுடனும் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தும்பொருட்டு அமைச்சுக்களில் ∴ திணைக்களங்களில் நியதிச்சட்டமுறை நிதியங்களின் பயன்பாட்டை முறைப்படுத்துதல், நிதியத்தின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

**திணைக்களத்தின் பணிகளும் பொறுப்புக்களும்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளைத் துரிதப்படுத்தும்பொருட்டு 2018 ஜுலை 03 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதமாக கடமைக் கட்டமைப்பு திருத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சகல அமைச்சுக்களும் கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் விரிவான துறைகளுக்கு வேறுபடுத்தப்பட்டுள்ள அதேவேளையில் அந்தந்தத் துறைகளுக்குக் கீழ் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுவது சகல உத்தியோகத்தர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ) பிராந்திய அபிவிருத்தி
(ஆ) ஆளுகை
(இ) சூழல்
(ஈ) பாதுகாப்பு

(உ) உட்கட்டமைப்பு
(ஊ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு
(எ) சமயம் மற்றும் கலாச்சார அலுவல்கள்
(ஏ) ஆரம்பக் கைத்தொழில்
(ஐ) சமூக நலன்புரி
(ஒ) சுகாதாரம்
(ஓ) கைத்தொழில்
(ஔ) காணி
(க) கல்வி
(கா) இளைஞர் விவகாரம்
(கி) விசேட செலவின அலகுகள்

திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் கீழே காட்டப்பட்டுள்ள துறைசார் மற்றும் துறைசாரா ஒப்படைகள் நிறைவேற்றப்படுகின்றன.

**நிதி ஒழுங்குபடுத்தல் பிரிவு**

- நிதி ஒழுங்குவிதி விடயத்தில், பிரேரணைகளை மீளாய்வு செய்தல், மற்றும் கருத்துரை வழங்கல்.
- புதிய அரச நிதி முகாமைத்துவ (PFM) சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான தொழிற்பாடுகளை நிறைவேற்றல்.
- நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரச நிதி சுற்றறிக்கைகளில் இருந்து விடுவிப்பதற்கான முன்மொழிவுகளுக்கான பரிந்துரைகளை வழங்கல்.
- அரசாங்க நிறுவனங்களின் (அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள்) கொடுக்கல்வாங்கல் பற்றி பரிசீலனை செய்யும்போது அரச கணக்குகள் செயற்குழுவிற்கு உதவுதல்.
- கணக்காய்வு அதிபதியின் அறிக்கை மற்றும் கணக்காய்வு விசாரணைகள் சம்பந்தமான தொடர்செயல்களை மேற்கொள்ளுதல்.
- பொதுக் கணக்குகள் பற்றிய செயற்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பான தொடர்செயல்களை மேற்கொள்ளல்.
- பாராளுமன்ற கூட்டத் தொடர்களின் போது பொதுக் கணக்குகள் பற்றிய செயற்குழுவின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு திறைசேரி குறிப்புக்களை வழங்குதல்.
- நிதி ஒழுங்குவிதி 202 இன் கீழ் சலுகைக் கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைகளை மீளாய்வு செய்தலும் உரிய நபர்களுக்கு தெரிவித்தலும்.
- அரச செலவுகள் முகாமைத்துவ சிக்கல்களை மீளாய்வு செய்தல்.
- அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகியவற்றில் தற்சமயம் காணப்படும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றிய தரவுகளையும் விபரங்களையும் சேகரித்தல், ஒப்பீடு செய்தல் மற்றும் விநியோகித்தல்.
- அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகியவற்றில் தற்சமயம் காணப்படும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளைத் திருத்துவதற்காக பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் வழங்கல்
- நிதியொழுங்கு விதிகளின் கீழ் நட்டம், பதிவழித்தல மற்றும் கைவிடல் கோரிக்கைகளை பரிசீலனை செய்தலும் பரிந்துரைத்தலும்.

**நிதியங்கள் பிரிவு**

- நியதிச்சட்ட , பொறுப்புடைமை மற்றும் திணைக்கள நிதியங்கள் தொடர்பான நடவடிக்கை செயல்முறைகளை மேற்பார்வை செய்தல்.
- நிதிய மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- வருடாந்த கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைகளை பரீட்சித்தல் மற்றும் நிதியங்கள் பற்றிய பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.
- நிதிய செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- நியதிச் சட்டமல்லா நிதியங்களை ஒழுங்குபடுத்தல்.

**பெறுகைப் பிரிவு**

- பெறுகை பற்றிய விடயங்களை ஆய்வு செய்தலும் பரிந்துரை வழங்கலும்.
- அரச முகவரகங்களில் பெறுகை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக பெறுகை பற்றிய சிக்கல்களை தெளிவுபடுத்தலும் வழங்கலும்.
- பெறுகைத் தீர்மானங்களுக்கான செயல்முறையை துரிதப்படுத்துவதற்காக அமைச்சரவை மட்ட பெறுகைக்காக பெறுகைக் குழுக்கள்(PC), தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு(TEC), மற்றும் கருத்திட்டக் குழுக்கள்(PC), நியமிப்பிப்பதற்கு வசதியளித்தல்.
- பெறுகை அறிவித்தல், உயர் பெறுகை அறிவித்தல், பெறுகைத் திட்டமிடல் மற்றும் ஒப்பந்த வழங்கலை இணையத் தளத்திற்கு பதிவேற்றம் செய்தல்.
- (e-Gp) முறைமையை அமுல்படுத்தல்.
- பெறுகை நடவடிக்கைகளுக்கான கொள்கை வகுப்பு மேற்கொள்ளும் போது தேதசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு(NPC) ஒத்துழைப்பு வழங்கல்.

பெறுகை தொடர்பான விடயங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருத்திட்ட அமுலாக்கல், அரச தனியார்கூட்டு முயற்சி(PPP) மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கௌரவ நிதி அமைச்சரின் சார்பில் அமைச்சரவைப் பத்திரம் மீதான அவதானிப்புக்களைத் தயாரித்தல்.

# அரச நிதித் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு




| | | |
|---|---|---|
| ப.நா. – பணிப்பாளர் நாயகம் | மே.ப.நா. – மேலதிக பணிப்பாளர் நாயகம | ப – பணிப்பாளர் |
| உ_.ப - உ_தவி பணிப்பாளர் உ_த்தியோகத்தர் | நி.உ_ – நிருவாக உ_த்தியோகத்தர் | அ.உ_. – அபிவிருத்தி |
| தி.செ.உ_- திட்டம் செயற்படுத்துகை உ_தவியாளர் | மு.உ_- முகாமைத்துவ உ_தவியாளர் | மொ. – மொளிபெயர்ப்பாளர் |
| அ.ப.செ – அலுவலக பணியாளர் சேவை | சா.சே சாரதி சேவை | |

## 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை அதன் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தும்போது சிறந்த மட்டத்தில் காணப்பட்டது தொடர்புடைய காலையில் திணைக்களத்தின் ஒவ்வொரு நிர்வாக மற்றும் கணக்கு பிரிவுகளின்கீழ் ஒழுங்குமுறை படுத்தல் பெருகை முகாமைத்துவம் மற்றும் நிதியங்களில் முகாமைத்துவம் போன்ற துறைகள் பின்வரும் நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

### 1. நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான செயற்பாடுகள்

### 1.1 புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டமூலம்

அரச நிதி முகாமைத்துவ ஒழுங்குவிதியின் மூலம் அரசாங்கத் துறையின் கொடுக்கல் வாங்கல்களுக்காக விரிவான சட்டரீதியான வரைசட்டகத்தை வழங்குகின்றது. செயற்பாடுகளின் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கும் அவற்றின் தரத்தையும் பிரதிபலனையும் மேம்படுத்துவதற்காக அரச நிதி முனாமைத்துவ மறுசீரமைப்பு முக்கியமானதாகும். அரச நிதி முகாமைத்துவச் சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் வழிகாட்டல்களின் அடிப்படையில் பங்குதாரர்கள் அமைப்புக்கள் பலவற்றின் உதவியுடன் அது தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் 1992 நிதி ஒழுங்குவிதியின் தற்போதைய பதிப்பின் பதிலீடாக அமையும்.

இந்த திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் அரச நிதி முகாமைத்துவ சட்ட வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது நிபுணர் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டு அவதானிப்புகள் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. அந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளையும் உள்ளடக்கியதாக திருத்தப்பட்ட அரசாங்க நிதி முகாமைத்துவம் சட்ட வரைவினை சட்டரீதியான ஆவணம் ஒன்றாக தயாரிப்பதற்கு நிதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு 2018.11.23 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நிதி அமைச்சின் மூலம் 2019 ஆம் ஆண்டின் நடு ஆண்டில் புதிய அரசாங்க நிதி முகாமைத்துவம் சட்டத்தை பாராளுமன்றத்தின் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

### 1.2 அரச கணக்குகள் பற்றிய செயற்குழு (COPA)

அரசாங்கம் தனது சேவைகளை வழங்கும் பொறுப்பில் அரசாங்க நிதியத்தின் பயன்பாடு சம்பந்தமாக பிரஜைகளுக்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதனால் சட்டரீதியான தன்மை, நிலையானதன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக விரிவான சட்டம் மற்றும் நிர்வாக வரையறைகளுக்கு உட்பட்டு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த சூழ்நிலையின்கீழ் அரசியலமைப்புச் சட்டத்தின் 74 ஆம் உறுப்புரை மற்றும் பாராளுமன்ற நிலையியல் கட்டளை 125இன் பிரகாரம் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் செயற்பாட்டை தொடர்புடைய நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்ட கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையுடன் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக அரச கணக்குகள் பற்றிய

செயற்குழு தாபிக்கப்பட்டுள்ளது. இந்த பரிசீலனை நடவடிக்கை பொதுத் திறைசேரியின் திணைக்களங்களின் உதவி மற்றும் வழிகாட்டல்களின்கீழ் கோபா குழுவின்மூலம் மேற்கொள்கின்றது. கோபா குழுவினால் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களுடன் இணைந்து சிறந்த முகாமைத்துவமொன்றைப் பேணுவதற்காக அரச நிதித் திணைக்கயத்தினால் கோபா அறிக்கைகளில் அடையாளம் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் திருத்திக்கொள்வதற்கு ஆலோசனைகள் வெளியிடப்படுகின்றன.

அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச நிதித் திணைக்கயத்தினால் திறைசேரியின் செயலாளரின் ஊடாக கோபா அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கையெடுப்பதற்கு திறைசேரிக் குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்தக் குறிப்புகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரச நிதி முகாமைத்துவத்தில் காணப்படுகின்ற வழிகாட்டல் குறிப்புகள் பயன்படுத்தப்படுகின்றது.

வருடத்தினுள் திறைசேரியின் பிரதிநிதிகள் இந்த குழுக் கூட்டங்களில் பங்குபற்றியுள்ள அதேவேளையில் ஊழியர் குழு அறிக்கை சம்பந்தமாக வழிகாட்டல் மற்றும் தொடர்செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கோபா அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தீர்க்கமான, தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளைத் திருத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### 1.3 அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு விசாரணைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கை பற்றிய தொடர் செயல்களை மேற்கொள்ளுதல்.

கணக்கய்வாளர் அதிபதியினால் பல்வேறு அரச நிறுவனங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை பற்றி கவனம்செலுத்தி கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவத்தின் பலவீனங்களைத் திருத்திக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்தந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் கணக்கய்வாளர் அதிபதியினால் அறிக்கையிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக அரச நிதித் திணைக்களத்தினால் தொடர்செயல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அரசாங்கத்தின் ஆட்புல எல்லைக்குள் வருகின்ற அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு உரிமை மாற்றப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வுக் கட்டணங்களைத் திருத்துவது சம்பந்தமாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து அரச நிதித் திணைக்களத்தின் உடன்பாடு வழங்கப்பட்டுள்ளது.

### 1.4 அரச கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் சேவைகளை வழங்கும்போது அறவிடப்படுகின்ற கட்டணமானது, அந்த சேவைகளை வழங்கும்போது உரப்படவேண்டி ஏற்படுகின்ற நிர்வாகச் செலவுகள் உட்பட சேவை வழங்குநர்களுக்கு தாங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் நியாயமானதாகவும் வெளிப்படைத் தன்மையைக்கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். அதனால் திறைசேரியினால் கட்டணங்களை அறவிடும் முறைமையை அடிக்கடி மீளாய்வுசெய்து திருத்துவது அரச நிதித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் திறைசேரியின் அனுமதியின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற கட்டணம் பற்றி மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட அதேவேளையில் பின்வரும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 01- அரச கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்**

| | அமைச்சின் பெயர் | | திருத்தப்பட்ட கட்டண வகை |
|---|---|---|---|
| 1 | கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்துள்ள நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | அ | வர்த்தகக் குறியீடு |
| | | ஆ | காப்பரிமை அனுமதிப் பத்திரம் |
| | | இ | கைத்தொழில் வடிவமைப்பு |
| | | ஈ | முகவர்கள் |
| | | உ | விவரண ஏடு |
| | | ஊ | வர்த்தகக் குறியீடு |
| 2 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | அ | 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் அரசாங்க முகவர் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் (06.07.2018) புகையிரத கட்டணங்களின் திருத்தம் |
| | | ஆ | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்திற்கு அமைவாக கட்டணங்களை திருத்துதல் (28.09.2018) |
| 3 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | | மிரிஸ்ஸ எனுமிடத்தில் திமிங்கிலங்களை பார்வையிடும் நடவடிக்கைகளை முறைமை படுத்துதல் - வெளிநாட்டவர் ஒருவருக்கான சேவை கட்டணம் ஐ.அ.டொலர் 01 உள்நாட்டவர் ஒருவருக்கான சேவை கட்டணம் ரூபா 50.00 |
| 4 | நீதி அமைச்சு | அ | நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் |
| | | ஆ | திணைக்களம் |
| | | இ | சேவை கட்டணம் |
| 5 | பாதுகாப்பு அமைச்சு | ஈ | விமான சேவை நிலுவை வருமானம் |
| | | உ | நூதனசாலைக்கான நுழைவு கட்டணம் |
| 6 | சட்டமும் ஒழுங்கும் | அ | வெளிநாடுகளில் இலங்கை தூதரகங்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் |
| | | அ | வெளிநாடு ஒன்றிலிருந்து தபால் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் |
| 6 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | | வெளிநாட்டில் இலங்கை தூதுக்குழு செயற்பாடுகளின்போது e-DAS தொகுதியை செயற்படுத்துதல் - 2018.01.05 |
| 7 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | | E- காணிப் பதிவு நிகழ்ச்சித்திட்டத்தை பதிவுசெய்தல் |
| 8 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | | E- காணிப் பதிவு நிகழ்ச்சித்திட்டத்தை பதிவுசெய்தல் |
| 9 | பாதுகாப்பு அமைச்சு | அ | நாளொன்றுக்கு தலா 25 நபர்களின் வெடி மருந்து பயன்பாட்டுக்காக ரூபா12,500.00 அரசாங்க கட்டணமொன்றை அறவிடல் |
| | | ஆ | மேலதிக ஒவ்வொரு நகருக்கும் ரூபா 500.00 அரசாங்க கட்டணமொன்றை அறவிடுதல் |

| | | | |
|---|---|---|---|
| **10.** | நெடுஞ்சாலைகள், வீதிஅபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | | எண்ணெய் வர்த்தகத்திற்காக வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணத்தை 1000 டொலர்களிலிருந்து 5000 டொலர்கள் வரை அதிகரித்தல் |
| **11.** | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | | |
| **12.** | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | | சுற்றுலா மாளிகை |
| **13.** | உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | அ<br>ஆ | வாகனங்களை முன் பதிவு செய்தல்<br>வாசிகசாலை நிரந்தர / தற்காலிக அங்கத்துவம்<br>புகைப்படம் (மென் பிரதி) |
| **14.** | மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | அ<br>ஆ | சுற்றுலா விடுதிகளை பதிவு செய்தல்<br>வாகனங்களை முன் பதிவு செய்தல் |

## 1.5 நட்டம் மற்றும் பதிவழித்தல்

2018 ஆம் ஆண்டின் நட்டம் மற்றும் பதிவழித்தல் பற்றிய முன்னேற்றம் பின்வருமாறு.

நிதியொழுங்குவிதி 102 முதல் 110 வரை காட்டப்படுகின்ற அரசாங்க சொத்துக்கள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கின்ற நாணயப் பெறுமதியைக் கொண்டுள்ள சொத்துக்கள் சம்பந்தமாக உத்தியோகத்தர்களுக்கு கட்டுப்படுத்த முடியாத காரணிகளின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள நட்டங்களைத் தவிர அரசாங்க உத்தியோகத்தர்களின் கவனக்குறைவு மற்றும் தாமதங்களின் காரணமாக ஏற்படுகின்ற ஏனைய நட்டங்கள் மற்றும் முறைகேடுகள் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நட்டமாகக் கருதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய நியதிச்சட்டமுறை மற்றும் ஏனைய வருமானங்களும் முற்பணக்கணக்குகளின் கீழ் அறவிடவேண்டிய நிதியை அறிவிடுவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு அறிவிடுவதற்கு வேறு மாற்று நடவடிக்கைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் நிதி ஒழுங்குவிதி 113 இன் கீழ் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**அட்டவணை 02 – நட்டம் மற்றும் பதிவழித்தல்**

| விபரம் | அமைச்சு | தொகை (ரூபா) |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி 108(3) இன் பிரகாரம் 35/8 முதல் 35/13 வரையான கட்டுநிதிக் கணக்குகளிலுள்ள தீர்க்கப்படாத கட்டுநிதி நிலுவைகளைத் தீர்த்தல் | வெளிநாட்டு அலுவல்கள் | 49,525,429.05 |
| தேசிய உபகரணம் மற்றும் பொறித்தொகுதி அமைப்பினால் (NEMO) வாடகைக்கு எடுக்கப்பட்ட பொறித்தொகுதிகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு (CIDA/ICTAD) அறவிட வேண்டிய நிலுவைத் | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை | 114,529,393.00 |

| | | |
|---|---|---|
| தொகையை அதன் புத்தகங்களிலிருந்து கைவிடுதல் - 2018.09.13 | | |
| காப்புறுதியினூடாக காப்பீடு செய்யப்படாத PD – 9102 எனும் இலக்க வாகனம் விபத்திற்குள்ளானதன் காரணமாக ஏற்பட்ட நட்டத்தின் எஞ்சிய தொகையைப் பதிவழித்தல் | வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சு | 420,282.68 |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் | அரசாங்க சேவை ஆணைக்குழு | 27,900.00 |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு - வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 104,356.00 |
| கொழும்பு தலைமையகத்திலுள்ள பிரதான தபால் அலுவலகக் கட்டடத்தில் முத்தரைகள் காணாமல் போனதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் | அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் | 4,146,650.00 |
| காப்புறுதியினூடாக காப்பீடு செய்யப்படாத WP GI – 8444 எனும் இலக்க ஜீப் வண்டி விபத்திற்குள்ளானதன் காரணமாக ஏற்பட்ட நட்டத்தின் எஞ்சிய தொகையைப் பதிவழித்தல் | பாதுகாப்பு அமைச்சு | 2,844,919.19 |
| KF கடன் இல. 711 இன் கீழ் காணப்படுகின்ற மீள்நிரப்பப்படாது எஞ்சியுள்ள தொகை | கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு | 211,392,244.70 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திரு.எச்.எம்.டீ. பண்டார (நீர்மானி முகாமையாளர்) | நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு | 10,034.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திரு. ஆர். ராஜேஷ்வரன் (வேலை நிருவாகி) | கமத்தொழில் அமைச்சு, கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களம் - நீர்ப்பாசனத் திணைக்களம் | 21,035.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திரு. எம்.ஆர். ரணவீர (தொழில்நுட்ப உதவியாளர்) | கமத்தொழில் அமைச்சு, கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களம் - நீர்ப்பாசனத் திணைக்களம் | 73,182.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு | கல்வி அமைச்சு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 20,580.00 |

| | | |
|---|---|---|
| நிலுவைகளை பதிவழித்தல் - திரு. எம்.ஆர். ரணவீர (தொழில்நுட்ப உதவியாளர்) | | |
| இலங்கை கமத்தொழில் விற்பனை அதிகாரசபையின் நட்டத்தைப் பதிவழித்தல் (பொலநறுவை மாவட்டச் செயலகம்) 2018.01.10 | உள்நாட்டு அலுவல்கள் | 4,948,542.72 |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் நட்டத்தைப் பதிவழித்தல் (பொலநறுவை மாவட்டச் செயலகம்) 2018.01.10 | உள்நாட்டு அலுவல்கள் | 10,011,086.00 |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு வாடகை மற்றும் கட்டணங்கள் | அரச நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 46,553.00 |
| 1982-2012 வரையான காலப்பகுதிக்காக சுங்க மேலதிக நேரக் கொடுப்பனவு நிதியில் சமன்படுத்தப்படாத கடன்களைப் பதிவழித்தல் | அரச நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 23,752,879.72 |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கின் கீழ் கடன் நிலுவைகளை பதிவழிப்பதற்கான கோரிக்கை - இல. 10401 - திரு. யு.கே. ரத்ணசிங்ஹ ரணவீர | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 295,021.00 |
| செலுத்தப்படாத பழைய கடன் நிலுவைகளை பதிவழிப்பதற்கு சமர்ப்பித்தல். ரூபா 10,000.00 விடக் கூடிய கடன் நிலுவைகள் | பாதுகாப்பு அமைச்சு | 757,215.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திருமதி. எம். காளியம்மா | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி | 10,600.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திரு. ஜீ.எச்.கே. அமரசிங்ஹ | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி | 44,808.00 |
| நிதி ஒழுங்குவிதி 113 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு நிலுவைகளை பதிவழித்தல் - திருமதி. வீ. குப்பம்மா | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி | 15,525.00 |
| மொத்தம் | | 422,998,236.06 |

### 1.6 சர்வதேச தூதுக்குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட வானகனங்களை அகற்றுதல்

2/92 ஆம் இலக்கத்தைக்கொண்ட அரச தூதுக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் இருக்கின்ற வெளிநாட்டு அரசாங்க முகவர் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தமது கடமை நடவடிக்கைகளுக்காக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை அவர்கள் மீண்டும் தமது தாய் நாட்டிற்குச் செல்லும்போது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கின்றனர். இதன்போது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தீர்வை வரித்தொகை பற்றி நடவடிக்கை பற்றி அரச நிதித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் சுங்கத் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் 58 தூதுக்குழுக்களின் வாகன அகற்றலினூடாக ரூபா. 77,197,998.00 தொகை அரசாங்க வருமானத்திற்கு வரவுவைக்கப்பட்டுள்ளது.

### 1.7 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதி ஒழுங்குவிதி 494 இன் கீழ் முத்திரை தீர்வை மார்க்கமாக திரட்டப்படுகின்ற வருமானத்தின் ஒதுக்கீடு

திறைசேரியின் அச்சிடல் பொறுப்புகளுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டுக்காக முத்திரை வருமானங்களின் மூலம் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதித் தொகை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு "திறைசேரி 68" மாற்றல் படிவத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 03 – முத்திரை தீர்வைகள்**

| நிறுவனம் | வருமானத் தலைப்பு | பற்று (ரூ.) | வரவு (ரூ.) |
|---|---|---|---|
| முத்திரை வருமானம் (பொது) | 5000/10 02 07 00 | 3,266,659,632.91 | |
| தபால் திணைக்களம் | 4000/20 01 02 00 | | 2,344,644,065.00 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 6000/00/14/0/3 | | 906,204,459.91 |
| ஆட்பதிவுத் திணைக்களம | 4000/20 03 02 03 | | 6,891,081.00 |
| பதிவாளர் நாயகம் திணைக்களம் | 4000/10 03 07 02 | | 8,049,327.00 |
| அளவீட்டு அலகு, தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 6000/0/0/6/69 | | 580,467.00 |
| -அதே- | 4000/20 03 02 99 | | 290,233.00 |
| | | 3,266,659,632.91 | 3,266,659,632.91 |

### 1.8 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமித்தல் - 2018

அரசியலமைப்புச் சட்டத்தின் 52(1) உறுப்புரையின் மூலம் வழங்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் அமைச்சின் செயலாளர்கள் தமது அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படுதல் வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதியில் பதினெட்டு செயலாளர்களை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக நியமித்து கடிதங்களை வழங்குவதற்கு இந்தத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## 2. அரச நிதி சுற்றறிக்கைகள் - 2018

அரச நிதி திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் பெறுகை நிதி ஒழுங்குவிதி மற்றும் நிதியங்களின் முகாமைத்துவம் சம்பந்தமாக பின்வரும் சுற்றறிக்கைகளையும் பின்னிணைப்புகளையும் வெளியிட்டுள்ளது.

**அட்டவணை 04- அரச நிதி சுற்றறிக்கை**

| | திகதி | சுற்றறிக்கை இலக்கம் | தலைப்பு |
|---|---|---|---|
| **1** | 17-01-2018 | 01/2018 | 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 261 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் கட்டணங்களையும் அறவீடுகளையும் திருத்துவதற்காக அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2018 வெளியிடுதல். |
| **2** | 27-08-2018 | 02/2018 | நியதிச்சட்டமுறை மற்றும் நியதிச்சட்டமுறை அல்லாத நிதியங்களை மீளாய்வு செய்தல் - வரவு செலவுத்திட்ட முன்மொழிவு 2016 |
| **3** | 23-10-2018 | 05/2018 | இலங்கை அரசாங்க சேவைக்கு மின்-அரசாங்க பெறுகை (e-Gp) தொகுதியை அறிமுகப்படுத்துதல். |
| **4** | 16-11-2018 | அரச நிதி சுற்றறிக்கை கடித இல.: 05 | இலங்கை அரசாங்க சேவைக்கு மின்-அரசாங்க பெறுகை (e-Gp) தொகுதியை அறிமுகப்படுத்துதல். |
| **5** | 19-11-2018 | 06/2018 | அரச துறை பெறுகைகளுக்காக உள்நாட்டு கடன் கடிதங்களை திறத்தல். |
| **6** | 26-11-2018 | 07/2018 | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு (SCAPCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழு(CANCs) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஆலோசனை பெறுகைக் குழு (CACPCs) |

### 2.1 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 261 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் கட்டணங்களையும் அறவீடுகளையும் திருத்துவதற்காக அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2018 வெளியிடுதல்.

அரசாங்க முகவர் நிலையங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் பல வருடங்களாக திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது புலனாகியது. அதனால் 2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைவாக இந்தக் கட்டணங்கள் தற்கால பொருளாதார சுட்டிகளை எடுத்துக்காட்டக் கூடிய விதத்தில் காலத்திற்கு காலம் திருத்தப்பட

வேண்டும் என்பது பாராளுமன்றத்தின் அபிப்பிராயமாக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த 3 வருடங்களாக திருத்தப்பட்டிராத அவ்வாறான 09 கட்டண வகைகள் குறைந்தபட்சம் 15% சதவீதத்தினாலேனும் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்ட அதேவேளையில், அதற்காக பாராளுமன்றத்தின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டது

அதன் பின்னர் தற்போதைய பொருளாதார தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கட்டணங்களையும் அறவீடுகளையும் திருத்திக்கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தி அரச நிதி திணைக்களத்தினால் 2018.01.17 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

**2.2 2018.08.27 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை வெளியிடுதல் (நியதிச் சட்டமுறை மற்றும் நியதிச்சட்டமுறை அல்லாத நிதியங்களை மீளாய்வு செய்தல்-வரவு செலவுத்திட்ட முன்மொழிவு 2016)**

